செய்தி வெளியீடு எண்: 584 நாள் : 18. 11. 2014

## செய்தி வெளியீடு

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை – 106.

2014–2015 ஆம் கல்வியாண்டிற்குரிய பி.எஸ்.எம்.எஸ் / பி.ஏ.எம்.எஸ் / பி.யு.எம்.எஸ் / பி.எச்.எம்.எஸ் / பி.என்.ஓய்.எஸ் மருத்துவ பட்டபடிப்பிற்களுக்கான சேர்க்கைக்கான ஒற்றை சாளர முறை கலந்தாய்வு சென்னை, அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலுள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் 17.10.2014 முதல் 20.10.2014 வரையிலான நாட்களில் நடைபெற்று அரசு மற்றும் தனியார் சுய நிதிக்கல்லூரிகளில் உள்ள காலியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2) இன்றைய நாளில் 5 அரசு கல்லூரிகளில் 13 (பதிமூன்று) காலியிடங்களும் 20 சுய நிதிக்கல்லூரிகளில் 132 (நூற்று முப்பத்தியிரண்டு ) காலியிடங்களும் உள்ளது. அவை முறையே

| மருத்துவ முறை | கல்லூரி | பொது | பிபவ | பிபவமு | மிபிவ | ஆதிவ | ஆதி அ | ஆபகு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சித்தா | அரசு | -- | 3 | -- | -- | 1 | 1 | -- | 5 |
| | சுயநிதி | -- | 7 | 1 | 2 | 4 | -- | -- | 14 |
| ஓமியோபதி | அரசு | -- | 3 | -- | 1 | -- | -- | -- | 4 |
| | சுயநிதி | -- | 22 | 6 | 18 | 15 | 3 | 1 | 65 |
| யோகா மற்றும் இயற்கை மருத்துவம் | அரசு | -- | 1 | -- | -- | -- | 1 | -- | 2 |
| | சுயநிதி | -- | 16 | 4 | 6 | 12 | 5 | 2 | 45 |
| ஆயுர்வேதா | அரசு | -- | 1 | -- | -- | 1 | -- | -- | 2 |
| | சுயநிதி | -- | 4 | -- | 1 | 3 | -- | -- | 8 |
| மொத்தம் | | -- | 57 | 11 | 28 | 36 | 10 | 3 | 145 |

சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் இக் கல்வியாண்டில் கூடுதலாக 10 இடங்கள் உயர்த்தப்பட்டு அரசாணை பெறப்பட்டுள்ளது. எனவே அதனையும் சேர்த்து மொத்தம் 155 இடங்களுக்கு கலந்தாய்வு நடைபெறும்.

*3) மேற்கண்ட காலியிடங்களுக்கு முன்னே நகர்த்தும் கலந்தாய்வும் (Movement Counselling ), இந்த நகர்த்துதல் கலந்தாய்வின் தொடர்ச்சியாக அடுத்தடுத்து ஏற்படும் மற்ற காலியிடங்களுக்கு ( ஆயுஷ் சுய நிதி கல்லூரிகள் உட்பட) மறு கலந்தாய்வும் 21–11–2014 அன்று காலை சரியாக 9.00 மணிக்கு தொடங்கும்*

*4) இதில் கலந்து கொள்ள கீழ்வரும் வகைகளில் உள்ளோர்* ***தகுதியானவர்கள் கிடையாது.***

*( அ ) 17.10.2014 முதல் 20.10.2014 வரை நடைபெற்ற கலந்தாய்வில் பங்கு கொள்ளாதவர்கள்.*

*( ஆ ) முந்தைய கலந்தாய்விற்கு வருகை புரிந்து வருகை பதிவேட்டில் ஒப்பமிட்டுவிட்டு விருப்பப் படிவம் சமர்ப்பிக்காதவர்கள்*

*(இ ) தனது சுற்றின்போது அரசு கல்லூரிகளில் இடமிருந்தும் அதனைத்தேர்வு செய்யாமல் தனது சொந்த விருப்பத்தின் பேரில் அதனை எழுத்தால் தெரிவித்து தனியார் சுயநிதி ஆயுஷ் மருத்துவ கல்லூரியினைத்தேர்வு செய்து இட ஒதுக்கீட்டு ஆணையைப் பெற்றவர்கள்.*

*( ஈ ) முந்தைய கலந்தாய்வில் கலந்து கொண்டு தனது சொந்த விருப்பத்தின் பேரில் இட ஒதுக்கீட்டு ஆணையை பெற்று கல்லூரியில் இணையாதோர்.*

*5) மேற்கண்ட நகர்த்துதல் கலந்தாய்வு மற்றும் அதன் தொடர்ச்சியாக மறு கலந்தாய்வு ஆகியவற்றில்* ***கலந்து கொள்ள தகுதியானவர்கள் முறையே,***

*( அ ) முந்தைய கலந்தாய்வில் கலந்து கொண்டு, அரசு கல்லூரிகளில் இடம் கிடைக்காததால் மற்ற ஆயுஷ் சுயநிதிக்கல்லூரிகளை தேர்வு செய்யாமல் காத்திருப்போர் பட்டியலில் உள்ளோர்.*

*( ஆ ) தனது சுற்றின்போது இட ஒதுக்கீட்டு ஆணை பெற்று உரிய கல்லூரியில் இணைந்தோர்.*

*6) முந்தைய கலந்தாய்வில் கலந்து கொண்டு ரூ.5,500/– க்கான கேட்பு வரைவோலை செலுத்தி இட ஒதுக்கீட்டு ஆணை பெற்று கல்லூரியில் இணைந்தோர் மறுபடியும்*

*கேட்பு வரைவோலை செலுத்த தேவையில்லை. ஆயினும், முந்தைய கலந்தாய்வில் கலந்து கொண்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் இந்த கலந்தாய்வில் இட ஒதுக்கீட்டு ஆணை பெறும் போது ரூ.5,500/– க்கான கேட்பு வரைவோலை, ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் " இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை – 106" என்ற பெயரில் 11 .11.2014–க்கு பிறகு எடுத்ததாக சென்னையில் மாற்றத்தக்கதாக செலுத்த வேண்டும்.*

*7) அனைத்து மாணவர்களின் கவனத்திற்கு : " நகர்த்துதல் மற்றும் மறு கலந்தாய்வு ' 21/11/2014 அன்று சரியாக காலை 09.00 மணிக்கு துவங்கப்பட இருக்கிறது. மேலும் இதில் கலந்து கொள்ள இருப்போர் அனைவரும் கண்டிப்பாக சரியாக காலை 10.00 மணிக்குள்ளாக வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டவர் மட்டுமே அன்றைய தயாரிக்கப்படும் தரவரிசைப் பட்டியலில் இடம் பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தாமதமாக வருகை புரிவோர் எக்காரணத்தை கொண்டும் கலந்தாய்வில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படமாட்டாது.*

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**